# வளர் தமிழ் ஆய்வு

யாதும் ஊரே
யாவரும் கேளிர்

பதிப்பாசிரியர்கள்

சி. மைக்கேல் சரோஜினி பாய்

ப. பத்மநாப பிள்ளை

வ. இராசரத்தினம்

வளர் தமிழ் ஆய்வு மன்றம்

திண்டுக்கல்

2018

ISBN NO : 978-81-920884-7-1

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | வளர் தமிழ் ஆய்வு<br>(கட்டுரைத் தொகுப்பு) |
| பதிப்பாசிரியர்கள் | : | சி. மைக்கேல் சரோஜினி பாய்<br>ப. பத்மநாப பிள்ளை<br>வ. இராசரத்தினம் |
| முதற் பதிப்பு | : | மே 2018 |
| தாள் | : | **18.6** மேப் லித்தோ |
| அளவு | : | டெம்மி |
| அச்சுரு | : | பாமினி 10 புள்ளி |
| பக்கம் | : | **x + 318** |
| விலை | : | ரூபாய் **500/-** |
| அச்சகம் | : | சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ்<br>சிவகாசி |
| உரிமை | : | பதிப்பாசிரியர்களுக்கு |
| வெளியீடு | : | வளர் தமிழ் ஆய்வு மன்றம்<br>பூங்குன்றன் பள்ளி வளாகம்<br>விவேகானந்தா நகர்<br>திண்டுக்கல் - 624 001<br>தமிழ்நாடு<br>தொ.பே. 0451-2427458 |

116. அ.ராஜன்
'இனக்குழு வழிபாட்'டில் நிறுவனம் சார் மரபும் நிறுவனம் சாரா மரபும்: அரிச்சந்திரன் கதையாடலை முன் வைத்து... 183

117. ராஜம்
விளையாட்டுத் துறையில் மாணவிகளின் முன்னேற்றத்திற்கான அடிப்படைகள் 186

118. பெ.ராஜா
நெய்தல் நிலமும் தமிழர்களின் பண்பாடும் 190

119. எம்.ரேணுகா
பெரிய புராணத்தில் தொண்டும் அன்பும் 195

120. லட்சுமி கார்மேகம்
தமிழ்மொழிப் பயன்பாட்டில் சூகுள் ஒலி எழுத்து மாற்றியின் பங்களிப்பு 200

121. கி.லட்சுமி நாராயணன்
பாவேந்தருக்குப் பின் தமிழ்க்கவிதையில் நேர்ந்த தேக்கம் 204

122. க.லதா
சங்க இலக்கியங்களில் பரதவர் வாழ்வியல் 207

123. ப.லதா
செப்புப் படிமக் கலை 211

124. ப.லிங்கம்
திருக்குறளில் மழையும் வேளாண்மையும் 214

125. ஜீ. லெட்சுமிபிரியா
அக்கினி சாட்சி கூறும் பெண்களின் பிரச்சினைகள் 218

126. சு.லோகிதா
சித்தர் இலக்கியத்தின் அமைப்பு முறை 223

127. சை.வஹிதா கௌசிகா
பெண் கவிஞர்களின் கவிதைகளில் நனவிலிக் கூறுகள் 227

128. மு.வசந்த் பாண்டியன்
கள்ளி நாவல் காட்டும் தலித்களின் வாழ்வியல் பிரச்சினைகள் 233

129. சி.வத்சலா லட்சுமி நாராயணன்
சங்க காலத்தில் பயிரிடும் முறை 238

130. வாசுகி ஜெயரத்னம்
குங்குமம் தோழியின் நடப்பியல் போக்கு 243

# பெரியபுராணத்தில் தொண்டும் அன்பும்

"என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாக தமிழ்செய்யு மாறே" (திருமந்திரம்)

என்று பாடும் திருமூலர் தன்னைப் பற்றித் தமிழில் ஆகமம் செய்யுமாறு எனக்கு நல்ல ஞானத்தை அளித்து இறைவன் பிறவியைக் கொடுத்தருளினான் என்கிறார். திருநாவுக்கரசரோ அடியார்கள் மூலமாக இறைவன் அருளியவையே பக்தி இலக்கியங்கள் என்பதைப் **'பத்திமையால் பணிந்து அடியேன் தன்னைப் பன்னாள் பாமாலை பாடப் பயில்வித்தானை'** என்று எடுத்தியம்புகிறார். இறைவன் முதலடி எடுத்துக் கொடுக்க, இயற்றப்பட்ட பக்தி இலக்கியங்கள் இதனை உறுதிப்படுத்து கின்றன. ஒவ்வொரு தெய்வப் புலவரும் தமிழால் பக்தி இலக்கியங்களைப் படைத்தனர். இந்நிலையில் எழுந்த அருந்தமிழ்க் காப்பியமாகப் பெரியபுராணம் விளங்குகிறது. இந்நூல் திருத்தொண்டர்தம் திருத்தொண்டின் திறத்தையும் சமயப் பற்றையும் சிவாகமத் தெளிவையும் எடுத்துரைக்கிறது. மற்ற பக்தி இலக்கியங்கள், அவர்களுக்கு இறைவனோடு ஏற்பட்ட அனுபவங்களை, அவன் திருவருள் உணர்த்திய படியே எடுத்துரைக்க, பெரியபுராணமோ இறைவனின் அளப்பரிய ஆற்றலையும் அடியவர்களின் தன்னலமில்லாத தொண்டு வாழ்வினையும் நுட்பமாக எடுத்தோதுகிறது.

**பக்தி ஊற்றெடுக்கும் இலக்கியம்**

பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப்
பாடிய கவிவலவ!

என்று மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சேக்கிழாரை வாழ்த்துகிறார். பெரியபுராணம் பக்திச்சுவை ஊற்றெடுத்துப் பாயும் திருவருட் கடலாய், தித்திக்கும் தெள்ளமுதாய்த் திகழும் செந்தமிழ்க் காப்பியமாகும். சிவநெறி உலகெலாம் பரவ வேண்டுமென்பதாலும், உலக மக்கள் நல்வழியில் சென்று இன்புற வேண்டும் என்பதாலும் படைக்கப்பட்ட காப்பியமாக இது விளங்குகிறது. பெரியபுராணத்தில் எடுத்துரைக்கப்படும் நாயன்மார்கள் முக்தியை விடப் பக்தியையே பெரிதாக எண்ணி வாழ்ந்த அன்பினர். இறைவனே அடியெடுத்துக் கொடுத்த இக்காப்பியம் முழுமையும் அருளால் நிறைந்திருக்கிறது. இதனாலே **'தெய்வம் மணக்கும் செய்யுள் எல்லாம்'** என்று போற்றப்படுகிறது. மேலும் திருநெறிய தமிழ், புண்ணிய செந்தமிழ், எழுதும் மாமறை, பக்திமிகு பாடல்கள் என்றும் புகழப்படுகிறது. இறைவனுக்கும் அடியாருக்கும் உள்ள தொடர்பினை உளங்கொள வைக்கும் பாங்குடையதாய் விளங்கு கிறது.

'திருமுறை' என்பதற்கு நிலையான முத்திச் செல்வத்தினை உலக மக்கள் எளிதில் பெறுதற்கு உதவும் நூல் என்று பொருள். பெரியபுராணம், திருமுறைகளில் ஒன்றாக - பன்னிரண்டாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் சைவ சமய வாழ்க்கை எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதற்கு வரையறை

**முனைவர் நா.ரேணுகா**
**பாத்திமா கல்லூரி, மதுரை.**